[1994 மார்ச் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18, திரு டி. வேலையா, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

18—

ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலம் கிராமங்கள் ஒட்டுமொத்தமாக பயனடையத் திட்டங்கள் தீட்டுதல்

*22146— திரு. டி வேலையா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டங்களில் தனி நபர்களுக்குக் கடன் வழங்குவதற்குப் பதிலாக, கிராமங்கள் ஒட்டு மொத்தமாக பயன் அடையும் வகையில் திட்டங்கள் மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து மத்திய அரசுதான் கொள்கையளவில் முடிவு செய்ய வேண்டும்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ. ஆர், டி. பி. கடனைப் பொறுத்தவரையில் 100 பேர்கள் கடன் கேட்டால் 2 அல்லது 3 பேர்களுக்குத்தான் அந்தக் கடனை வழங்குகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கூட வங்கிகளில் சரியான ஒத்துழைப்புக் கொடுக்கப்படுவதில்லை. இதனால், கடன் கிடைக்காதவர்கள் எல்லோரும் சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் நெருக்கடிக்கு ஆளாக்குகிறார்கள். ஆகவே இப்படி தனிப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேர்கள் பலன் அடைவதைவிட, ஒட்டு மொத்தமாக அந்த பகுதியிலே விவசாயம், தச்சுக்கூடம், பால் பண்ணை போன்ற தொழில்களுக்கு, ஊருக்காக அந்த கிராமத்திற்காக ஒட்டு மொத்தமாக இந்த பணத்தை முதலீடு செய்து, அங்கே தொழில் பயிற்சி எல்லாம் அளித்து, அங்கே இருக்கிற மக்களுக்குப் பொதுவாக வேலைவாய்ப்பு கொடுத்தால், இப்படிப்பட்ட திட்டங்கள் பொதுமக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும், ஆகவே. அந்த அடிப்படையில் மத்திய அரசையும் கேட்டு, இந்த திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டம் என்று சொல்லுகின்ற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசால் அகில இந்திய அளவிலே நடைமுறைப்படுத்தப் படுகிறது. இப்படி அகில இந்திய அளவிலே நடைமுறைப்படுத்

1994 மார்ச் 17]

தப்படுகின்ற பொழுது நிதி ஒதுக்கீடும் மத்திய அரசாலே நிர்ணயம் செய்யப்பட்டு மொத்த நிதி ஒதுக்கீட்டிலே 50 சதவீதம் மத்திய அரசாலும்; 50 சதவீதம் நிதி உதவி மாநில அரசாலும் அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, நிதியுதவி அவர்கள் அளிக்கின்ற காரணத்தால் மாவட்ட அளவிலே இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகின்றபொழுது ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு பயனாளிகள் வழங்கப்பட வேண்டுமென்ற குறியீட்டையும் அவர்களே நிர்ணயிக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பேருக்குத்தன் இந்த ஆண்டு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு மேல் நாம் வழங்க முடியாது. ஆகவே, இது கொள்கை முடிவு; மத்திய அரசு எடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலும், ஏற்கெனவே இந்தத் திட்டம் முறையாக மாநில அரசால் செயல் படுத்தப்பட்டு வருகிற காரணத்தாலும், தற்போது இருக்கின்ற முறையே போதுமானது என்று கருதப்படுகிறது.

திரு. டி. வேலய்யா: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கடனுக்கு விண்ணப்பிப்பவர்களைப் பொறுத்த வரையில் கடன் கிடைத்தவர்களுக்கு மட்டும் தகவல் கொடுக்கிறார்கள், கடன் கிடைக்காத பல பேர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்களா அல்லது வருகிற ஆண்டிலேயாவது அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா என்று எந்த விவரமும் கொடுக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட காரணத்தால் வருஷம் முழுவதும், சட்டமன்ற உறுப்பினர்களைத் தேடிக்கொண்டு மக்கள் அலைந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த மாவட்ட வளர்ச்சி முழுமுகமைக்குத் தக்க அறிவுரை வழங்கி, கடனுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றாலும், முறையான பதிலை எழுத்து மூலமாக அறிவிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்குச் சாத்தியக் கூறாக இருக்கும் என்பதை ஆராய்ந்து இதுப்பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இன்றைக்கு இந்த திட்டத்தின் மூலமாக பயனாளிகள் கிட்டத்தட்ட ஓராண்டிற்கு இருபதாயிரத்திற்கும் மேலாகப் பயனடைகிறார்கள். ஆக, ஆண்டிற்கு இருபதாயிரத்

திற்கும் மேலாக இந்தத் திட்டத்தின் மூலமாக மாநில அரசு, பயனாளிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறபோது, ஒரு கோடி மக்களுக்கும் மேலாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், இது சம்பந்தமாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இது ஒரு நல்ல யோசனை என்ற அடிப்படையில் இது சம்மந்தமாக உடனடியாக அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19 திருமதி ரமணி நல்லதம்பி மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

19—

பனைத் தொழில் செய்யும் நாடார் வகுப்பினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*24606—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பனைத் தொழில் செய்து மிகவும் பின்தங்கிய நிலையில் வாழுபவர்களைப் பெருவாரியாகக் கொண்ட நாடார் இனம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. து. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையின்றி நாடார் வகுப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடார் சமுதாயத்தைச் சார்ந்த மக்களை, கிராமப்புறங்களிலே பார்ப்போமேயானால், தங்கள் உயிரைப் பணயம் வைத்து, பனை ஏறுகிற தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும், மிகவும் கீழ்த்தரமான, பொருளாதாரத்திலும் சமூக ரீதியிலும் மிகவும் பின்தங்கிய கீழ்த்தரமான வாழ்க்கை முறையை அவர்கள் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காரணத்தால் அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தைக் கருத்தில்கொண்டு, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க